பட்டுக்கோட்டையல் துணை நீதிமன்றம்.

*வினா எண். 129—திரு. மு. அம்பிகாபதி, திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூரில் இயங்கிவரும் சப்-கோர்ட்டை பட்டுக் கோட்டைக்கு மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், மன்னார்குடியில் இயங்கிவரும் குற்ற இயல் துணை நீதிமன்றத்தையும் பட்டுக்கோட்டைக்கு மாற்றம் செய்வதற்கான காரணங்கள் யாவை ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தஞ்சாவூரில் இயங்கி வருகின்ற நீதிமன்றத்தை பட்டுக்கோட் டைக்கு மாற்றுவதாக உத்தேசம் இல்லை. ஆனால் பட்டுக் கோட்டையிலேயே தனியாக ஒரு துணை நீதிமன்றம் ஆரம்பிக்கப் பட்டு, தற்போது இயங்கி வருகின்றது.

வாணியம்பாடியினை தனி ஊராட்சி ஒன்றியமாக்கல்.

*வினா எண். 130—திரு. இ. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பத்தூர், பேரணாம்பட்டு, நாட்ராம்பள்ளி ஒன்றியங்களை மாற்றியமைப்பதன் மூலம் வாணியம்பாடியினை புது ஊராட்சி ஒன்றியமாக மாற்றும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

(ஆ) இது குறித்து ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள் சம்பந்தமான பிரிவினை எவ்வளவு காலத்திற்குள் நடக்கும். ஏனென்றால் இந்தப் பிரிவினை என்று வருகிறபோது அடுத்து வரக்கூடிய தேர்தல் காலத்தில் நடக்காமல் போகும். அப்படியானால் தேர்தல் எப்போது? இன்னும் வேறு சீர்திருத்தங் களையெல்லாம் செய்வதாகச் சொல்கிறார்கள். பெண்களுக் கென்று, அரிசனங்களுக்கென்று, அதெல்லாம் முடிய காலதாமத ஆகுமா? என்றைய தினத்திற்குள் என்பதெற்கென ஒரு கால வரையறை உண்டா? இதற்கெல்லாம் அமைச்சரவர்கள் விளக்கம் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒன்றியங்களின் பிரிவினைகள் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நாம் செய்து கொண்டிருக்கும் ஏற்பாடு 18 வயதுக்குள்ளாக அனைவரையும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற பணியும் பெண்கள் அரிசனங்கள் மற்றும் பிற்பட்ட மக்களுக்கு எவ்வளவு இடம் என்ற வகையிற் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சில பகுதிகளையும், நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து சில பகுதிகளையும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்ப்பதும், திருப்பத்தூர் ஊராட்சியில் இருந்து சில பகுதிகளை நாட்ராம்பள்ளி ஒன்றியத்தில் சேர்ப்பதான திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தை அரசு எப்போது செயல்படுத்தும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தேர்தலுக்கு முன்னாலே செயல் படுத்தாது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் புதிய ஊராட்சி ஒன்றியம் அமையும் என்றார்கள். அப்படி அமைக்கப்படுகின்ற ஒன்றியத்தினுடைய பெயர் என்ன? ஜவ்வாது மலையில் உள்ள சில பகுதிகளைச் சேர்த்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி இந்த ஒன்றியம் மலையில் ஆரம்பிக்கப்படுமா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து 13 ஊராட்சிகள் நாட்ராம்பள்ளி மற்றும் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் 3 ஊராட்சிகள்; மொத்தம் 19 ஊராட்சிகள் அதோடு சேர்க்கப்பட்டு வாணியம்பாடி ஒன்றியம் என்று அதற்குப் பெயர் வைக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்திருக்கிறார்.

திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

*வினா எண். 131—திரு. ஆர். சண்முகம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் உத்தேசம் உண்டா:

(ஆ) ஆம் எனில், எப்போது நகராட்சியாக்கப்படும்: